# முன்னேற்ற அறிக்கை

# 2024

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு



**கலாநிதி உப்பாலி பன்னிலகே**

கௌரவ அமைச்சர்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு



**வசந்த பியதிஸ்ஸ**

கௌரவ பிரதி அமைச்சர்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு



**மலர்மதி கங்காதரன்**

செயலாளர்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு

# பொருளடக்கம்


| | விபரம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் ,செயற்பாடுகள் மற்றும் பணிகள் | 1-2 |
| 02 | ஆளணி முகாமைத்துவம் | 3 |
| 03 | அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு | 4 |
| 04 | **அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறைமை .** | |
| 4.1 | சமுர்த்தி அபிவிருத்தித்திணைக்களம் **(DSD)** | 5 – 11 |
| 4.2 | சமூக சேவைகள் திணைக்களம் **(DSS)** | 12 – 17 |
| 4.3 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் **(NSPD)** | 18 – 22 |
| 4.4 | முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் **(NSE)** | 23 – 30 |
| 4.5 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை **(SLSSB)** | 31 – 33 |
| 4.6 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் **(NISD)** | 34 – 41 |
| 4.7 | சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் **(SDB)** | 42 – 44 |
| 4.8 | கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் **(RDTRI)** | 45 – 48 |
| 4.9 | உளவளத்துணைப் பிரிவு | 49- 52 |
| 4.10 | வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் | 53 – 54 |
| 4.11 | பிற தொழிற்பாட்டுப் பிரிவுகள் | 55- 56 |

## 1. அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2289/43 என்ற இலக்க மற்றும் 2022.07.22 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. இவ் அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் பிரிவு மற்றும் சமூக வலுவூட்டல் பிரிவு ஆகிய இரு பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், சமுதாயத்தில் ஓரங்கப்பட்டுள்ள குழுக்கள் அதாவது அங்கவீனமுற்ற நபர்கள், முதியோர்கள், குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்கள், உளநலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குதல், குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களினை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், 2024 ஆம் ஆண்டில் இவ் அமைச்சின் சமூக வலுவூட்டுதல் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாக இருந்தது. அதன்படி, அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணி பின்வருமாறு இருந்தது.

**தொலைநோக்கு** – ‘‘அபிவிருத்தியின் முழுமையான பலன்களினை நியாயமாகவும் மற்றும் சமமாகவும் அனுபவிக்கும் வளமான சமுதாயம்.’’

**பணிக்கூற்று** – ‘‘தேசிய முன்னுரிமைகள், தேவைப்பாடுகள் அதேபோல சர்வதேச தரங்களினைக் கவனத்திற்கொண்டு,பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், மகளிர், சிறுவர்கள், பாதிக்கப்படக்கூடிய மற்றும் சலுகைகள் கிடைக்காத நபர்களின் சமூகப் பாதுகாப்புக்குத் தேவையான சட்டம்சார், நிறுவனம்சார் மற்றும் மனிதவள சேவைகளினை வழங்குதல், மேம்படுத்துவதற்கான திட்டங்களினைத் தொகுத்தல் மற்றும் செயலாக்குதல்.’’

பின்னாளில், இலங்கையின் கிராமப் பகுதியில் பேண்தகு அபிவிருத்தியினை ஊக்குவித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை மேம்படுத்துதல் மற்றும் சுதந்திரமான சமுதாயமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக சமுதாயத்தினை வலுவூட்டுதல் போன்ற அம்சங்களினை உள்ளடக்குவதற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2412/8 என்ற இலக்க மற்றும் 2024.11.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சாக நிறுவப்பட்டுள்ள இவ் அமைச்சின் தற்போதைய பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

1. அரசினூடாக செயலாக்கப்படும் தேசியக் கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுதல் தொடர்பான விடயங்கள், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.
3. விரயம் மற்றும் ஊழலினைத் இல்லாதொளித்தலினூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு அமைவாக புதிய முகாமைத்துவத் திட்டங்கள், தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.
4. கிராம உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும் முயற்சிகளினை மேலும் அமுலாக்குதல்.
5. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
6. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் தேவைகளினை நிறைவேற்றுதல்.
7. பொதுசன உதவி முன்மொழிவுத் திட்டங்களினை மதிப்பாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் பொருத்தமான புதிய சீர்த்திருத்தங்களினை அறிமுகம் செய்தல்.
8. காச நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், தொழுநோயாளிகள் புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு உதவி வழங்குதல்.

9. குடும்ப உளவளத்துணை சேவைகளினை அமுலாக்குதல்.
10. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளுடன் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்கிக் கொடுப்பதற்கும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
12. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பிரதான நீரோட்டத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஏற்றவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
13. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
14. முதியோர்களினைப் பாதுகாத்தல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்கேற்பினை மேலோங்கச் செய்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளினை விளைத்திறன் மற்றும் வினைத்திறனான வகையில் நிறைவேற்றுவதற்குப் பின்வரும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலூக்கமான வகையில் செயற்பட்டு வருகின்றன.

### கிராமிய அபிவிருத்திப் பிரிவு

i. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
ii. கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### சமூகப் பாதுகாப்புப் பிரிவு

i. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
ii. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
iii. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)
iv. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை(SLSSB)
v. உளவளத்துணைப் பிரிவு

### சமுதாய வலுவூட்டல் பிரிவு

i. சமுர்த்தி அபிவிருத்தித்திணைக்களம் (DSD)

### கல்வி நிறுவனம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

மேலும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்குத்தேவையான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு உதவியினை வழங்குவதற்கு நிர்வாகப் பிரிவு, கணக்குகள் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு மற்றும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு அமுலாக்கப்படுகின்றன.

அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு தொடர்பில் சமூக வலுவூட்டல் பிரிவுக்கு உரித்தான (தற்போது கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு) திணைக்களங்கள், நிறுவனங்கள், பிரிவுகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் தொடர்பிலும் மற்றும் 2024.12.31 ஆந் திகதி வரை பெறப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.ஆளணி முகாமைத்துவம்

| நிறுவனம் | சிரேஸ்ட நிலை | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டவர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/ மேலதிகம் |
| கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை மற்றும் உளவளத்துணைப் பிரிவு. | 27 | 22 | 3 | 4 | 772 | 531 | 45 | 34 | **847** | **591** | **256** |
| **திணைக்களங்கள்/நிறுவனங்கள்/பிரிவுகள்** | | | | | | | | | | | |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 131 | 63 | 369 | 1,431 | 24,800 | 21,009 | 431 | 441 | **25,731** | **22,944** | **2,787** |
| சமூக சேவைகள் திணைக்களம் | 8 | 7 | 502 | 229 | 693 | 638 | 288 | 242 | **1,491** | **1,116** | **375** |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | 6 | 5 | 3 | 2 | 53 | 39 | 6 | 2 | **68** | **48** | **20** |
| முதியோர்களுக்கான தேசிய செயலகம் | 7 | 4 | 2 | 1 | 115 | 102 | 23 | 12 | **147** | **119** | **28** |
| இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 8 | 7 | 14 | 11 | 133 | 93 | 43 | 39 | **198** | **150** | **48** |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | 53 | 33 | 9 | 5 | 49 | 35 | 26 | 20 | **137** | **93** | **44** |
| சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் | 14 | 9 | 4 | 0 | 74 | 29 | 10 | 2 | **102** | **40** | **62** |
| கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 4 | 3 | 14 | 11 | 21 | 18 | 11 | 7 | **50** | **39** | **11** |
| **மொத்தம்** | **258** | **153** | **920** | **1,694** | **26,710** | **22,494** | **883** | **799** | **28,771** | **25,140** | **3,631** |

## 3. அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு 2024 ஆம் ஆண்டில் செலவுத் தலைப்பு 171 இன் கீழும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தொடர்பில் செலவுத் தலைப்பு 331 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பில் செலவுத் தலைப்பு 216 இன் கீழும் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமூக வலுவூட்டல் பிரிவு (தற்போது கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டுகை அமைச்சு) தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| செலவு வகை | 2024ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2024.01.01தொடக்கம்2024.12.31வரையிலான நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு (சமூக வலுவூட்டல் பிரிவு) செலவுத் தலைப்பு171** | | |
| மூலதனம் | 1,364.50 | 341.39 |
| மீண்டுவரும் | 1,281.29 | 1,171.50 |
| **உப தொகை** | **2,645.80** | **1,512.88** |
| **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்- செலவுத் தலைப்பு331** | | |
| மூலதனம் | 72.00 | 62.41 |
| மீண்டுவரும் | 57,860.74 | 21,289.46 |
| **உப தொகை** | **57,932.74** | **21,351.87** |
| **சமூக சேவைகள் திணைக்களம் – செலவுத் தலைப்பு216** | | |
| மூலதனம் | 116.15 | 89.37 |
| மீண்டுவரும் | 1,387.77 | 1,219.08 |
| **உப தொகை** | **1,503.92** | **1,308.35** |
| **முழு மொத்தம்** | **62,082.46** | **24,173.10** |

# 4.அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறைமை.

## 4.1. சமுர்த்திஅபிவிருத்தித்திணைக்களம் (DSD)

### அறிமுகம்

இலங்கையில் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நீதியினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு ஏழையின் மறைந்திருக்கும் திறனை வெளி ப்படுத்துவதில் உள்ள தடைகளினை நீக்குவதன் மூலம், அக்குடும்பங்களினை வலுவூட்டுதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்காக சமுர்த்தி அபிவிருத்தித்திணைக்களம், 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி (திருத்தம்) சட்டத்தினைக் கொண்டு திருத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களினை, பொருளாதார, சமூக மற்றும் உளவியல் போன்ற அம்சங்களிலிருந்து வலுவூட்டி நிலைபேறான மற்றும் உயர்தர வாழ்க்கைத் தரத்தினை அடையப் பெற்ற குடும்ப அலகுகளாக மாற்றுதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

### கடமைப் பொறுப்பு

- ➢ 2025 தொடக்கம் 2029 வரையிலான 05 வருடக் காலப்பகுதியினுள், பல பரிமாண வறுமையை எதிர்கொள்ளும் 2 மில்லியன் குடும்பங்களினை, பொருளாதார, சமூக மற்றும் உளவியல் அம்சங்களின் கீழ் வலுவூட்டுதல்.
- ➢ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானம் ஈட்டும் வழிகள் மற்றும் வாழ்வாதார வழிகளினை மேம்படுத்துவதற்கு நுண் நிதியக் கடன் வசதிகளினை வழங்குதல்.
- ➢ குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துவதற்கு புலமைப்பரிசில் உதவிகளினை வழங்குதல்
- ➢ குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வீட்டு வசதிகளினை மேம்படுத்துவதற்கு வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்.
- ➢ குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சமூக அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல். .

### அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் – 2024 மற்றும் முன்னேற்றம் – 2024.12.31 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 72.00 | 62.41 |
| மீண்டுவரும் | 57,860.74 | 21,289.46 |
| மொத்தம் | 57,932.74 | 21,351.87 |

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

| செயற்திட்ட இலக்கம் 01 | “அஸ்வெசும” பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | பல பரிமாண வறுமையினை எதிர்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையினை குறைக்கும் நோக்குடன் அஸ்வெசும பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் இதுவரை செயலாக்கப்படுவதுடன், அது பிரதான 03 நிதிக் கூறுகளின் கீழ் இடம்பெறுகிறது.<br>1. உள்ளூர் நிதி<br>2. ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவி<br>3. உலக வங்கி கடன் உதவி.<br>உள்ளூர் நிதியின் கீழ் அமுலாக்கப்படும் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு நிதியின் கீழ் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பக்க இலக்கம் 53 இன் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது. |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (உள்ளூர்) (ரூ.மி.) | 6.30 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 5.55 |
| பௌதிக முன்னேற்றம் | • மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்திட்ட முகாமையாளர்களினை விழிப்புணர்வூட்டும் 24 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>• வலுவூட்டுவதற்கு தகைமையினைப் பெற்ற 260,340 குடும்பங்கள் மாவட்ட மட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.<br>• வலுவூட்டுவதற்கு அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப விருத்தித் திட்டங்களினை தயாரிப்பதற்காக தகவல்களினை ஒன்றுதிரட்டுதல் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **வலுவூட்டும் குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | ஊடுபயிர் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட நிலையான விவசாயத்தினை விருத்தி செய்தல், வாழ்வாதார மேம்பாடு, கடற்றொழில் அபிவிருத்தி, சிறு மற்றும் ஆரம்பக் கைத்தொழில்களினை ஊக்குவித்தல், பெறுமதி சேர்க்கும் செயற்திட்டங்களினை மேம்படுத்துதல். |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 21.70 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 21.50 |
| பௌதிக முன்னேற்றம் | ஊடுபயிர் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட நிலையான விவசாயத்தினை விருத்தி செய்தல். |

| | |
|---|---|
| | • 58 குடும்பங்கள்<br>• வாழ்வாதார மேம்பாடு – 49 குடும்பங்கள்<br>• மீன்பிடி அபிவிருத்தி – 47 குடும்பங்கள்<br>• சிறு மற்றும் ஆரம்பக் கைத்தொழில்களினை ஊக்குவித்தல் – 54 குடும்பங்கள்.<br>• பெறுமதி சேர்க்கும் செயற்திட்டங்களினை மேம்படுத்துதல். – 67 குடும்பங்கள். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **வலுவூட்டும் குடும்பங்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | Mini Food City வலையமைப்பினை உருவாக்குதல், RPL திட்டத்தின் கீழ் NVQ சான்றிதழினை வழங்குதல்(I மற்றும்II வது மட்டம்), வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்,வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், மொழித்திறன் விருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (ஜப்பான், கொரியன், ஆங்கிலம்), தொழில்முனைவு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (மாவட்ட மற்றும் பிரதேச மட்டம்), கரிம உணவு உற்பத்தி குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், தின்பண்ட விற்பனை நிலையங்களுக்கு காணிகளினைக் கையகப்படுத்துதல் மற்றும் அனுமதித்தல். |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 11.70 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 9.43 |
| பௌதிக முன்னேற்றம் | Mini Food City 25 வலையமைப்புக்கு தொடர்புபடுத்துதல்.,<br>RPL திட்டத்தின் கீழ் NVQ சான்றிதழ் வழங்குதல் (I மற்றும்II வது மட்டம்), - இளைஞர் யுவதிகள் 174 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்கள் – 265 பயனாளிகள், 13,324 வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் – இளைஞர் யுவதிகள் 253<br>மொழித் திறன் விருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (ஜப்பான், கொரியன், ஆங்கிலம்) – நிகழ்ச்சித் திட்டம் நிறைவு பெற்றுள்ளதுடன், இந்நிகழ்ச்சித் திட்டம் 08 மாவட்டங்களின் 1,008 இளைஞர் யுவதிகளுக்கு இலங்கை வெளிநாட்டுப் பணியகம் மற்றும் தேசிய அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலதிக நடவடிக்கைகள் இலங்கை வெளிநாட்டுப் பணியகத்தினூடாக இடம்பெறும்.<br>தொழில்முனைவு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் – 4,415 நபர்கள்<br>கரிம உணவு உற்பத்தி குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள். – 2<br>தின் பண்டங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்குக் காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் அனுமதித்தல் – 2 நிகழ்ச்சித் திட்டங்கள். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 04** | **சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | குழந்தைகளுக்கான கலாசார மற்றும் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டம், புகைப்பிடித்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம். |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 3.00 |
| நிதி முன்னேற்றம் | 2.87 |

| | |
|---|---|
| (ரூ.மி.) | |
| பௌதிக முன்னேற்றம் | குழந்தைகளுக்கான கலாசார மற்றும் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டங்கள் –180<br>புகைப்பிடித்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் -213 |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 05** | **சமுதாய அடிப்படையிலான அமைப்பு நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | மாவட்டக் குழுக் கூட்டங்களினை நடாத்துதல். |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 1.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.50 |
| பௌதிக முன்னேற்றம் | 50 கூட்டங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 06** | **சட்டம்சார் நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்ப அலகுகளின் சட்டச் சிக்கல்களினைத்தீர்ப்பதற்கு உதவுதல். |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 1.5 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.87 |
| பௌதிக முன்னேற்றம் | 11 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| | |

**திணைக்களம்சார் நிதியத்தின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

| **சமுர்த்தி வங்கி மற்றும் நுண் நிதி நிதியம்** | |
|---|---|
| **செயற்திட்ட இலக்கம் 01** | **வறிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நுண் நிதிக் கடனினை வழங்குதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 40,000.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 39,948.47 |
| பௌதிக முன்னேற்றம் | நுண் நிதிக் கடன் 269,295 |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **மதம் மற்றும் கலாசாரக் கொண்டாட்டங்கள்** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 27.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 17.76 |
| பௌதிக முன்னேற்றம் | 03 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **ஊடகம் மற்றும் விளம்பரம்** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 28.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 6.10 |

| | |
|---|---|
| பௌதிக முன்னேற்றம் | 01 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 04** | **வங்கிகளுக்கு வட்டி நிவாரணக் கொடுப்பனவுசலுகை வட்டி விகிதத்தின் கீழ் பயனாளிகளுக்கு கடனினை வழங்குதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 115.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 7.60 |
| பௌதிக முன்னேற்றம் | 01 வங்கி |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 05** | **வங்கிக் கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 40.60 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.83 |
| பௌதிக முன்னேற்றம் | 03 வங்கிகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 06** | **வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களுக்கு கட்டிட உட்கட்டமைப்பு வசதிகள், பிற வசதிகள் மற்றும் உபகரணங்களினை வழங்குதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 125.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 10.05 |
| பௌதிக முன்னேற்றம் | 05 வங்கிகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 07** | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (முகாமைத்துவம், கணக்கீட்டுப் பயிற்சி, கடன் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவப் பயிற்சி, நுண் நிதிச் சான்றிதழ், டிப்ளோமா மற்றும் உளப்பாங்கு விருத்தி)** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 35.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.94 |
| பௌதிக முன்னேற்றம் | 12 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| | |
| **சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியம்** | |
| **செயற்திட்ட இலக்கம் 01** | **சமுர்த்திக் குடும்பங்களின் உயர் தர மாணவர்களுக்கு “சிப்தொர” புலமைப்பரிசிலினை வழங்குதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 774.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 668.51 |
| பௌதிக முன்னேற்றம் | 40,341 மாணவர்கள் |

| | |
|---|---|
| **செயற்திட்ட இலக்கம் 02** | **நிலாவெளி பயிற்சி நிலைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (கட்டுமானம், பழுதுபார்த்தல், எந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்களினை வழங்குதல்)** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 21.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 4.47 |
| பௌதிக முன்னேற்றம் | பழுதுபார்க்கும் பணி 30% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், சில எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (குளிரூட்டி எந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.) |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 3.05 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2.72 |
| பௌதிக முன்னேற்றம் | 26 அச்சு எந்திரங்கள் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கணனி மென்பொருள் உருவாக்கம், அலுவலக உபகரணங்கள் மற்றும் அச்சு எந்திரங்கள் பழுதுபார்ப்பு. |
| | |
| **வீடமைப்பு லொத்தர் நிதியம்** | |
| **செயற்திட்ட இலக்கம் 01** | **வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ரூபா. 750,000/-)** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 502.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 456.50 |
| பௌதிக முன்னேற்றம் | 670 வீடுகளினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **விசேட கவனிப்புத் தேவையுடையவர்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ரூபா. 750,000/-)** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 12.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 12.25 |
| பௌதிக முன்னேற்றம் | 25 வீட்டு அலகுகளின் மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **ரூபா. 250,000/- விசேட கவனிப்புத் தேவையுடையவர்களுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 15.00 |
| நிதி முன்னேற்றம் | 14.90 |

| | |
|---|---|
| (ரூ.மி.) | |
| பௌதிக முன்னேற்றம் | 50 வீட்டு அலகுகளின் மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

| **தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்** | |
|---|---|
| **செயற்திட்ட இலக்கம் 01** | சர்வதேச புகைப்பிடித்தல் எதிர்ப்பு தினக் கொண்டாட்டம் தொடர்பிலான கொடி தின நிகழ்ச்சித் திட்டம் (மே 31 ஆந் திகதியன்று) |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 7.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 7.00 |
| பௌதிக முன்னேற்றம் | 25 மாவட்டங்களினையும் உள்ளடக்கி ஒரு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **கூட்டங்கள், பயிற்சியளித்தல், விளையாட்டுச் செயற்பாடுகள் மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.** |
| செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மி.) | 37.20 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 9.13 |
| பௌதிக முன்னேற்றம் | 11 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |

**2022 தொடக்கம்2024வரையில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம்**



## 4.2. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)

### அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி, ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் சமூக சேவைகள் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின், எவரையும் கைவிட்டு விடாத கொள்கையின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு சலுகை கிடைக்கப் பெறாத நாட்டின் ஒட்டுமொத்த சமுதாயத்திற்குமென பிறப்பு முதல் இறப்பு வரை நடைமுறைப்படுத்தப்படும் ஊடாடும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று 2025 ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதில், அமைச்சின் கீழ் சமூகப் பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை மற்றும் உளவளத்துணைப் பிரிவு போன்ற சகல நிறுவனங்கள் சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து பயனாளிகளினை துல்லியமாக அடையாளம்காணும் தரவுத் திட்டமொன்றினூடாக தயாரிக்கப்பட்ட மறுவாழ்வுத் திட்டத்தின் பிரகாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்கள் உள்ளடங்கலாக பிற ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு சலுகை கிடைக்கப் பெறாத சமுதாயத்தின் சம உரிமைகள், வாய்ப்புகள், சுதந்திரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு வருவாய் ஈட்டுவதற்கான அணுகலினை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

### கடமைப் பொறுப்பு

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் தொழில்வாண்மை செயற்பாடுகளினை புதிய தொழில்நுட்ப முறைமைகளினைப் பயன்படுத்தி தற்போதுள்ள சந்தைக்கு ஏற்றவாறு மேம்படுத்துதல்.
- அங்கவீனத்தினைக் கொண்ட பிள்ளைகளுக்கு முன்கூட்டிய தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை செயலாக்குதல் மற்றும் அவர்களினை சமூகமயமாக்குதல்.

- பெற்றோர் பாதுகாவலரினை இழந்த அங்கவீனமுற்ற நபர்களுக்கு முழுநேர வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினை புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயமாக்குதல்.
- விழிப்புலன்ரோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- சமுதாய அடிப்படை புனர்வாழ்வுச் செயற்பாட்டினைப் பலப்படுத்தி பிரபல்யப்படுத்துவதற்கு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தின் கண்காணிப்பு, குழுக்களின் மூலம் கண்காணிக்கப்படும் சுய உதவி அமைப்புக்களினூடாக புனர்வாழ்வுத் திட்டங்களினூடாக வாடிக்கையாளர்களினை வலுவூட்டும் வேலைத்திட்டமொன்றினை அமுலாக்குதல்.
- சைகை மொழிபெயர்ப்புச் சேவையினை வழங்குதல்.
- ரிதியகம தடுப்பு இல்லத்தினூடாக பிச்சைக்காரர்களினைப் புனர்வாழ்வளித்தல்.

## 2024 அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம் – 2024.12.31 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **மூலதனம்** | **116.15** | **89.37** |
| **மீண்டுவரும்** | **1,387.77** | **1,219.08** |
| **மொத்தம்** | **1,503.92** | **1,308.35** |

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

| **மீண்டுவரும் ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.** | |
|---|---|
| **செயற்திட்ட இலக்கம் 01** | **வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நாடுபூராவும் அமுலாக்கப்படும் 11 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக பயிற்சியினை வழங்குதல் இடம்பெறுகிறது. |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 36.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 35.60 |
| பௌதிக முன்னேற்றம் | 491 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினைப் பெறும் 491 அங்கவீனமுற்ற நபர்களுக்கு நலன்புரி பொருட்களினை (T shirts), படுக்கை விரிப்புக்கள் மற்றும் பிற) வழங்குதல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை நிறைவு செய்துள்ள 82 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழில் உபகரணத் தொகுதிகளினை வழங்குதல், 153 அங்கவீனமுற்ற சிறார்களுக்கு வழிகாட்டல்களினை வழங்குதல், 49 ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளினை |

| | |
|---|---|
| | வழங்குதல். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **போதைப் பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் மாவட்ட மட்டத்தில் சமூக உயிரோட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 1.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.496 |
| பௌதிக முன்னேற்றம் | மாவட்ட மட்டத்தில் போதைத் தடுப்பு மற்றும் சமூக உயிரோட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 27 நடாத்தப்படுதல், புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்களுக்கு 5 பின்தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | விழிப்புலனற்ற நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்கள் வழங்குதல் தொடர்பில் 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தினூடாக நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 9.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 8.31 |
| பௌதிக முன்னேற்றம் | உயர் தரத்தில் தேர்ச்சி பெற்ற விழிப்புலனற்ற 330 மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல், உயர் கல்வியினைத் தொடரும் மாணவர்களுக்கு 16 கையடக்கத் தொலைபேசிகளினை வழங்குதல், வெள்ளைப் பிரம்பு தினத்தினைக் கொண்டாடுதல். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 04** | **அங்கவீனமுற்ற நபர்களின் பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்கு வசதிகளினைச் செய்து கொடுத்தல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்களின் பொழுதுபோக்குச் செயற்பாடுகளுடன் தொடர்பிலான நிகழ்வு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 10.00 |

| | |
|---|---|
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 8.58 |
| பௌதிக முன்னேற்றம் | அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாவட்ட மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள், சித்றூ நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல் மற்றும் சைகை மொழி தினக் கொண்டாட்டம் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 05** | **வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினைப் பெறும் அங்கவீனமுற்ற இளைஞர்/யுவதிகளுக்கு அன்றாடக் கொடுப்பனவுகளினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியினைத் தொடரும் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு அன்றாடக் கொடுப்பனவுகளினை வழங்குதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 30.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 27.61 |
| பௌதிக முன்னேற்றம் | 855 அங்கவீனமுற்ற நபர்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம்06** | **புவக்பிட்டிய -ஜயவிரு சமாதி நிறுவனம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | புவக்பிட்டிய ஜயவிரு சமாதி நிறுவனத்தினூடாக விடுதியில் வைத்து போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல். |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 8.69 |
| பௌதிக முன்னேற்றம் | 109 போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் |
| | |
| **மீண்டுவரும் ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்கள்.** | |
| **செயற்திட்ட இலக்கம் 07** | **சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கிடையே, அவர்கள் வாழும் சமுதாயத்தின் சமூக அமைப்புக்களுக்கிடையே தொடர்புகளினை ஏற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல், வலுவூட்டுதல் மற்றும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு ஏற்றவாறு அவர்களினை மேம்படுத்துதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 11.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 10.27 |
| பௌதிக முன்னேற்றம் | அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் பிள்ளைகள் 60 பேருக்கு நேரடி உதவிகளினை வழங்குதல், சுவாபிமானி நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல், அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டுவதுடன் தொடர்பிலான 22 செயற்திட்டங்களினை பூர்த்தி செய்தல். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 08** | **அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினைப் புதுப்பித்தல்.** |

| | |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்ப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 24.91 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 23.63 |
| பௌதிக முன்னேற்றம் | கெட்டவல, அமுணுகும்புர, மாதம்பே, சீதுவ, வத்தேகம, களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள், புவக்பிட்டிய ஜயவிரு சமாதி, ஜயவிரு செவண நிலையங்கள் மற்றும் சித்திஜய, நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையங்களின் பழுதுபார்ப்புச் செயற்பாடுகள் மற்றும் புதுப்பிக்கும் செயற்பாபடுகளினை முன்னெடுத்தல். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 09** | **ரிதியகம தடுப்பு இல்லத்தினைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | ரிதியகம பிச்சைக்காரர்களினை புனர்வாழ்வளிப்பதற்கு செயலாக்கப்படும் ரிதியகம தடுப்பு இல்லத்தின் மேம்பாட்டுச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 10.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 7.03 |
| பௌதிக முன்னேற்றம் | சாப்பாட்டு அறையினைப் புதுப்பித்தல் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 10** | **கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தினை நிர்மாணித்தல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு கிளிநொச்சிப் பகுதியில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டுமாணப் பணிகள் இடம்பெறுதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 30.087 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 11.78 |
| பௌதிக முன்னேற்றம் | சாப்பாட்டறையின் கூரையினைப் பொருத்துதல், தரைக்கு மாபிள் பதித்தல், நிர்வாகக் கட்டிடத்தின் கதவுகள் மற்றும் யன்னல்களினைப் பொருத்துதல் (திட்டமிடப்பட்ட அளவின் 55%). |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 11** | **உத்தியோகத்தர் பயிற்சி** |
| செயற்திட்டப் பொழிப்பு | தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் உத்தியோகத்தர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |

| | |
|---|---|
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 3.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.25 |
| பௌதிக முன்னேற்றம் | 46 நிகழ்ச்சித் திட்டங்கள் |

## 2022 தொடக்கம் 2024 வரை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம்






## 4.3. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

### அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினை செயலாக்குதல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு சினேகபூர்வமான சூழலொன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்குதல் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக இடம்பெறுகிறது.

### நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினைக் கட்டியெழுப்புதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களின் தன்னிறைவு மற்றும் ஈடுகொடுக்கும் இயலுமையுடன் அவர்களின் சமுதாய மற்றும் பொருளாதார வாழ்க்கையினை மேலோங்கச் செய்வதற்கு வலுவூட்டுதல்.
- அனைவருக்கும் சமத்துவமான உரிமைகள், வாய்ப்புகள், சுதந்திரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளினைப் பாதுகாத்தல்.
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வசதிகளினைச் செய்து கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதாரம், கல்வி தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பிரவேசிப்பு வசதிகளுக்கு வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல்.

## அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் – 2024 மற்றும் முன்னேற்றம் – 2024.12.31. ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 50.00 | 50.00 |
| மீண்டுவரும் | 21.00 | 9.22 |
| மொத்தம் | 71.00 | 59.22 |

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

## திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.

| செயற்திட்ட இலக்கம் 01 | அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல். |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்களினை புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒன்றுதிரட்டும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினை சுதந்திரமான நபர்களாக மாற்றுவதற்கும் முழு நாட்டினையும் உள்ளடக்குமாறு மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், முச்சக்கர வண்டிகள், கையூன்றுகோல்கள், ஊன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்ற ரீதியிலும், காற்று மெத்தைகள், தண்ணீர் மெத்தைகள் போன்ற விசேட உபகரணங்கள் என்ற ரீதியிலும் மருத்துவப் பரிந்துரைகளின் கீழ்ஆகக்கூடியது ரூபா. 20,000 வரையிலான நிதியுதவி வழங்கப்படுகிறது. |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 11.47 |
| பௌதிக முன்னேற்றம் | 10,449 அங்கவீனமுற்ற நபர்கள் (13 செவிப்புலக் கருவிகள், 98 சக்கர நாற்காலிகள், 38 கொமட்டுடன்கூடிய சக்கர நாற்காலிகள், 100 முழங்கை ஊன்றுகோல்கள், 42 ஊன்றுகோல்கள், 63 நடக்கும் சட்டங்கள், 83 தூர மற்றும் கிட்டப் பார்வை மூக்குக் கண்ணாடிகள், 10,000 மூக்குக் கண்ணாடிகள், சிறப்புப் பட்டைகள் 2, 5 விசேட பாதணிகள், 03 செயற்கைக் கால்கள்.) |

| | |
|---|---|
| **செயற்திட்ட இலக்கம் 02** | **மருத்துவ உதவி வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்கள், நீண்டகாலமாக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அங்கவீன நிலைக்கு உட்படுவதைத் தடுக்கும் நோக்குடன் முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதில் அரச மருத்துவமனைகளினூடாக வழங்கப்படாத மருந்துகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு, சிகிச்சைகளில் கலந்துகொள்ளுவதற்கு, இருதயம், வில்லைகள், சிறுநீரகம், மூளை. இடுப்பு எலும்பு, காது திசு போன்ற வேண்டிய சத்திரசிகிச்சைக்குத் தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை இதன் கீழ் உதவி வழங்கப்படுகிறது. |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 16.17 |
| பௌதிக முன்னேற்றம் | 630 நபர்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 3** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவி வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்கு அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு அல்லது குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 40,000 வரையில் வழங்குதல் மற்றும் சுய தொழில் ஒழுங்கு முறையை மேம்படுத்துதல், உற்பத்திகளின் தரம் தொடர்பில் வழிகாட்டல் மற்றும் விற்பனையில் தலையீடு செய்தல் இடம்பெற்று வருகிறது. |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 6.84 |
| பௌதிக முன்னேற்றம் | 175 அங்கவீனமுற்ற நபர்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 4** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு கல்வியுதவி வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரையில் பிரதேச செயலாளரின் பரிந்துரையின் கீழ் வழங்கப்படுவதுடன், அது ஒரு தடைவை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவொன்றாக வழங்கப்படுகிறது. |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 11.74 |
| பௌதிக முன்னேற்றம் | 684 அங்கவீனமுற்ற பிள்ளைகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 5** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு திறன் விருத்திக்கு உதவி வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்களின் பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்கும் விசேட கல்வி அலகு தொடர்பில் அவர்களின் விளையாட்டுக்கள்,, கலை மற்றும் அழகியல் திறன்கள் மற்றும் பிற திறமைகளினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ரூபா. அதிகபட்சமாக ரூபா. 50,000/- வரை நிதியுதவியினை வழங்குதல். |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.39 |
| பௌதிக முன்னேற்றம் | 08 நிறுவனங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 6** | **தன்னார்வத் தொண்டு அமைப்புக்களினை வலுவூட்டுவதற்கு உதவி வழங்குதல்.** |

| | |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பௌதிக நிர்மாணிப்புக்காக ரூபா இரண்டு இலட்சம் வரை நிதியுதவியினை வழங்குதல். |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.69 |
| பௌதிக முன்னேற்றம் | 04 நிறுவனங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 7** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | அங்கவீனமுற்ற நபர்களுக்கு த பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அவர்களின் சம்பளத்திலிருந்து 50% (ஆகக் கூடியது ரூபா. 15,000/-) வரையில் அரசினூடாக கொடுப்பனவு இடம்பெறுகிறது. |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.22 |
| பௌதிக முன்னேற்றம் | 97 அங்கவீனமுற்ற நபர்கள் (2023-31/2024-66) |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 8** | **விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவியினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | விக்டோரியா இல்லத்தின் ஊழியர்களின் சம்பளம், நீர் மற்றும் மின்சாரப் பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளினை மேற்கொள்ளுதல். |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 9.00 |
| பௌதிக முன்னேற்றம் | விக்டோரியா இல்லத்தின் ஊழியர்களின் சம்பளம், நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளினை மேற்கொள்ளுதல். |
| **செயற்திட்ட இலக்கம் 9** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கான சர்வதேச தினத்திற்கு நிகராக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | சர்வதேச அங்கவீனர் தினத்திற்கு நிகராக “அங்கவீனமுற்ற நபர்களுக்கு அணுகல் வசதிகளினை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் துறையினை மேம்படுத்துதல் தொடர்பிலான தொனிப் பொருளின் கீழ் கலந்துரையாடல்சார் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட நிலைபேறான எதிர்காலத்திற்காக அவர்களின் தலைமைத்துவத்தினைப் பயிற்றுவித்துதல் என்ற தொனிப்பொருளின் கீழ் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல். |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.52 |
| பௌதிக முன்னேற்றம் | 02 நிகழ்ச்சித் திட்டங்கள் |

## பிற ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.

“சுப்பிரி வாசனா சம்பத” லொத்தர் நிதிய வருமானத்திலிருந்து 5% ஒதுக்கீட்டில் கட்டப்பட்டுள்ள வீடமைப்பு நிதியத்தினூடாக குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கு பின்வரும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

| **செயற்திட்ட இலக்கம் 1** | **அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவியினை வழங்குதல்.** |
|---|---|
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 27.46 |
| பௌதிக முன்னேற்றம் | 204 அங்கவீனமுற்ற நபர்கள் |
| | |

| செயற்திட்ட இலக்கம் 2 | அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதார வசதிகளினை வழங்குதல். |
|---|---|
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 6.59 |
| பௌதிக முன்னேற்றம் | 66 அங்கவீனமுற்ற நபர்கள் |

## பிற நிகழ்ச்சித் திட்டங்கள்

- **அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவு**

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களினை உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றினைத் தயாரிப்பதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் மற்றும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்த அமைச்சர் அவர்களினால் கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவ் விஞ்ஞாபனம் தொடர்பில் 2023.03.13 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இறுதிச் சட்டவரைவுக்கான அரசியலமைப்புச் சான்றிதழினைப் பெறுவதற்கு 2024.02.07 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2024.06.12 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இறுதிச் சட்ட வரைவு தொடர்பில் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2024.09.09 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்ட வரைவு நீதி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் திருத்தங்களினை உள்ளடக்குவதற்காக நீதி அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்குழுவினால் உரிய திருத்தங்கள் இடம்பெற்றுவருகிறது.

- **சைகை மொழிச் சட்ட வரைவு**

சைகை மொழிச் சட்ட வரைவின் இறுதி வரைவு 2024.02.12 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தாயரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் வரைவு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- **அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளை வர்த்தமானி**

அரச கட்டிடங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதி மற்றும் 1467/15 என்ற அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், தற்போதுள்ள நிலைமைக்குப் பொருந்துமாறு மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உரிய துறைக்கான நிபுணர்களினைக் கொண்ட குழுவொன்றினூடாக சர்வதேச தரநிலைகள், விவரக் குறிப்புக்களினைக் கருத்திற் கொண்டு பிரவேசிப்புக் கட்டளைகள் வரைவுபடுத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அவதானிப்புக்கள் பெறப்பட்டு வரப்படுகிறது.

## 2022 தொடக்கம்2024 வரை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள வருடாந்த ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம்




## 4.4. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

### அறிமுகம்

இலங்கை வாழ் முதியோர் சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் தனித்துவமான வாய்ப்பொன்றாக 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சட்டத்தினைக் கொண்டு திருத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தினை அமைத்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- முதியோர்களின் உடல், உளச் சமநிலை மற்றும் ஆரோக்கியத்தினை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் நலன்புரியினை மேம்படுத்துதல்,
- முதியோர்களினை பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல்.

### கடமைப் பொறுப்பு

- முதியோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு என்பதை சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகப் பிரிவின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியினூடாக வருமானத்தினை ஈட்டும் வழிகளுக்கு முன்வைத்தல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்கு தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்.

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் – 2024 மற்றும் முன்னேற்றம்- 2024.12.31 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 5.00 | 5.00 |
| மீண்டுவரும் | 16.80 | 15.88 |
| மொத்தம் | 21.80 | 20.88 |

**பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2024.12.31 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

**மீண்டுவரும் ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.**

| **செயற்திட்ட இலக்கம் 01** | **கிராமிய மட்ட முதியோர் அமைப்புக்களினை விழிப்புணர்வூட்டுதல்.** |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | சட்டத்தின் 16 வது பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ள கிராமிய முதியோர் குழுக்கள்/பிரதேச முதியோர் அமைப்புக்கள்/மாவட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் மாகாண முதியோர் அமைப்புக்கள் தொடர்பில் நிதிசார் அனுசரணையினை வழங்கி அவர்களினைக் கண்காணித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டுதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 0.19 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.19 |
| பௌதிக முன்னேற்றம் | 01 நிகழ்ச்சித் திட்டம் |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **பாடசாலை சிறார்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம்** |

| | |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | முதுமை மற்றும் முதியோர்களினைப் பராமரித்தல் தொடர்பில் பாடசாலை மாணவர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 0.53 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.53 |
| பௌதிக முன்னேற்றம் | 15 நிகழ்ச்சித் திட்டங்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு விசேட அடையாள அட்டைகளினை வழங்குதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 0.47 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 0.45 |
| பௌதிக முன்னேற்றம் | 37,517 அடையாள அட்டைகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 04** | **மாலிகாதென்ன முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செயற்பாடுகள்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2.10 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 2.09 |
| பௌதிக முன்னேற்றம் | நிர்வாகச் செயற்பாடுகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 05** | **முதியோர்களுக்கான தேசிய சபையினை நடாத்துதல்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 1.36 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.36 |
| பௌதிக முன்னேற்றம் | 10 அமர்வுகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 06** | **முதியோர் பராமரிப்புச் சபையினை முன்னெடுத்தல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | சட்டத்தின் 24 வது பிரிவின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபைக்கு, நிர்க்கதிக்குள்ளான பெற்றோர்களினை முன்வைத்து அவர்களுக்குப் பராமரிப்பு நிதியினை வழங்குவதற்குத் தேவையான ஆரம்பச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். |
| செயற்திட்டம் தொடர்பிலான | 1.63 |

| | |
|---|---|
| ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.55 |
| பௌதிக முன்னேற்றம் | 103 வழக்குகள் |
| | |

## முதியோர் நலன்புரி தேசிய நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

| **செயற்திட்ட இலக்கம் 01** | **ஆரோக்யா" மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டம்** |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | எந்தவொரு கொடுப்பனவுக்கும் உரித்தினைக் கொண்டிராத, நாள்பட்ட தொற்றாத நோய்களினால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு தலா ரூபா. 25,000 என்றவாறு வழங்குதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 50.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 50.00 |
| பௌதிக முன்னேற்றம் | 2000 முதியோர்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 02** | **மூத்த பிரஜைகளுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல்.** |
| செயற்திட்டப் பொழிப்பு | மூத்த பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகள், கண் வில்லைகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளினை வழங்குதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 114.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 75.90 |
| பௌதிக முன்னேற்றம் | 2000 செவிப்புலக் கருவிகள், 761 கண் வில்லைகள், 3000 மூக்குக் கண்ணாடிகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 03** | **முதியோர்களினைப் பராமரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்** |
| செயற்திட்டப் பொழிப்பு | முதியோர் இல்லங்களின் பராமரிப்பாளர்களுக்கு முதியோர்களினைப் பராமரிப்பது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 3.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 1.36 |
| பௌதிக முன்னேற்றம் | முதியோர் இல்லங்களின் 246 பராமரிப்பாளர்கள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 04** | **முதியோர் இல்லப் பராமரிப்பு மற்றும் நிர்வாகம்** |

| | |
|---|---|
| செயற்திட்டப் பொழிப்பு | பன்னல "Welcome" முதியோர் இல்லம், தெகிஅத்தகண்டிய "சரண" முதியோர் இல்லம், கதிர்காமம் முதியோர் இல்லம். |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 15.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 10.012 |
| பௌதிக முன்னேற்றம் | முதியோர் இல்லங்களின் நிர்வாகச் செயற்பாடுகள். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 05** | **கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்மாணிப்புப் பணிகள்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 150.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 114.959 |
| பௌதிக முன்னேற்றம் | 35% (ஒட்டுமொத்தம் 86%) |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 06** | **முதியோர் இல்லங்களினைக் கட்டுவதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் உபகரண உதவிகளினை வழங்குதல்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 40.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 30.88 |
| பௌதிக முன்னேற்றம் | 15 முதியோர் இல்லங்களினைப் புனரமைத்தல் (2023 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 08 முதியோர் இலங்களுக்கான கொடுப்பனவுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.) |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 07** | **முதியோர் பகல் நேர நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்குதல்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 70.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 21.98 |
| பௌதிக முன்னேற்றம் | 13 முதியோர் பகல்நேர நிலையங்களின் நிர்மாணிப்புப் பணிகள். |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 08** | **குறைந்த வருமானத்தினைக் கொண்ட முதியோர்களுக்கு வீடுகளினை நிர்மாணித்தல் அல்லது புனரமைப்பதற்கு அமுலாக்கப்படும் திரிய பியச வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 52.50 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 44.80 |

| | |
|---|---|
| பௌதிக முன்னேற்றம் | 64 வீடுகள் |
| | |
| **செயற்திட்ட இலக்கம் 09** | **முதியோர்கள் தமது வீடுகளில் வசிப்பதற்குத் தேவையான குறைவான வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குவதற்கு அமுலாக்கப்படும் "இலகுவான" நிதியுதவி பிரேரணைத் திட்டம்.** |
| செயற்திட்டம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 150.00 |
| நிதி முன்னேற்றம் (ரூ.மி.) | 150.00 |
| பௌதிக முன்னேற்றம் | 2,876 முதியோர்கள் |
| | |
